1979 மார்ச் 6]

திரு. என். கிட்டப்பா : வெள்ளாற்றின் குறுக்கே கடலூர்—சிதம்பரம் நெடுஞ்சாலையில் ஏற்கனவே கிழக்குக் கடற்கரைச் சாலை அமைவதையொட்டி ஒரு புது பாலம் அங்கே அமைக்க இருப்பதாக முன்னாள் இருந்த அரசு செய்தி வெளியிட்டது. அந்தக் கிழக்குக் கடற்கரைச்சாலை இன்னும் முழுமை அடையாமல் இருக்கிற நிலையில் புதிய ஒரு திட்டத்தின் மூலமாகவாவது கடலூர்—சிதம்பரம் நெடுஞ்சாலையில் வெள்ளாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் செயற்குறிப்பைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கிழக்குக் கடற்கரைச்சாலை மேம்பாட்டுத் திட்டம் பரிசீலனையில் இருந்துதான் வருகிறது. அந்தக் கிழக்கு கடற்கரைச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இந்தப் பால வேலையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் 30 லட்சம் ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அந்தப் பாலத்தின் தேவையை கூட அரசு உணர்ந்திருக்கிறது. காரணம் பேருந்துகள் மற்ற வாகனங்கள் புவனகிரி வழி செல்லவேண்டியிருப்பதால் ஏழு கிலோ மீட்டர் அதிகமாகச் செல்ல வேண்டியிருக்கிறது என்பதால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்பது அரசின் ஆய்வில் தெரிய வருகிறது. கிழக்குக் கடற்கரைச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தை துரிதப்படுத்தி அல்லது அரசாங்க சாலைத் திட்டத்தின்கீழ் நிதிநிலையை ஆய்ந்து விரைவில் எடுப்பதற்கு பரிசீலனை செய்யப்படும்.

கோமுகி ஆற்றுப்பாலத்தை அகலப்படுத்துதல்.

*வினா எண் 251 திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாகளுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி அருகே சேலம் நெடுஞ்சாலையில் கோமுகி நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலத்தை அகலப் படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) அதன் கரைகளைப் பலப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) இல்லை.

(ஆ) அதன் கரைகள் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருவதால் பலப்படுத்தவேண்டிய அவசியம் எழவில்லை.

[1979 மார்ச் 6

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : கள்ளக்குறிச்சி அருகே கோமுகி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலம் குறுகிய நிலையில் இருப்பதாலும் வளைவாக இருப்பதாலும் ஆண்டாண்டு வெள்ளம் வரும்போது அதன் கரைகள் உடைபட்டு அரசுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. எனவே, அந்தப் பாலத்தை ஒன்று அகலப்படுத்த வேண்டும் அல்லது வேறு ஒரு இடத்தில் புதிதாக ஒரு பாலம் அமைக்கப்பட வேண்டும். இந்த இரண்டில் ஒன்றை நிரந்தரமான ஆக்கப்பணியாகச் செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியுள்ள இரண்டு ஆலோசனைகளில் மாற்று ஒரு இடத்தில் பாலம் அமைப்பது என்றால் அதிகப்படி நிதி தேவைப்படும். ஆனால் மாற்று யோசனையான அகலப்படுத்துவது; என்பதைப் பொறுத்த வரையில் அரசு ஆய்ந்து அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப் பரிசிலனை மேற்கொள்ளும்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : அகலப்படுத்தலாம் என்று சொன்னதற்கு அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றி. அப்படியானால் எவ்வளவு இலட்சம் ரூபாயில் அந்த வேலை செய்யப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதுபற்றிய செயற் குறிப்பு இல்லை. அதுபற்றி ஆய்வு நடத்தி அதன் அடிப் படையில் மேற்கொள்ளப்படும்.

திரு. வ. துலுக்காணம் : ஏற்கனவே இதே கேள்வியைத் தான் நான் தங்களிடம் கேட்டேன். ஆற்றுத் தண்ணீர் நேராகச் செல்ல வேண்டுமென்றால் அந்தப் பாலத்தை அகற்றி விட்டு வேறு ஒரு இடத்தில் ஒரு புதிய பாலம் அமைத்தால்தான் போக்குவரத்துக்கு வசதியாக இருக்கும். ஆகவே அரசாங்கம் பல திட்டங்களுக்காக பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்யும்போது குறைந்த செலவில், சில இலட்சம் ரூபாய் செல வில் இந்தப் பாலத்தை, புதிய பாலத்தை அமைத்துத் தர முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : முக்கியமான திட்டங்கள், தேவைகள் பல இருக்கின்றன. ஆகவே, நிதிப்பிரச்சினையைப் பொறுத்தவரையில் சிக்கல் இருக்கிறது. அதன் காரணமாகத் தான் உடனடியாக அதை மேற்கொள்வதற்குச் சாத்தியக்கூறு இல்லை என்று குறிப்பிட்டேன்.